**In the Court of District Munsif cum Judicial Magistrate , Srirangam**
**CC.No.41/2019**
**PW-2**

**Date :-02.01.2025**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.மணிகன்டன் | Caste | |
| த/பெ. | திரு.சோமன் | Calling | பேட்டரி கடை |
| Village | திருவாணைக்கோவில் | Religion | |
| Taluk | ஸ்ரீரங்கம் | Age | 49 /2024 |

**அரசு தரப்பில் முதல் விசாரணை-**

நான் தற்போது ஸ்ரீரங்கம்த திருவானைக்கேவிலில் வசித்து வருகிறேன் . என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் ஆவணத்தில் உள்ள 2 வது சாட்சி கையொப்பங்கள் என்னுடையதுதான் . கடந்த 20.06.2017 ம் தேதி காலை 10.30 மணி அளவில் நான் பேட்டரி கடையிலிருந்து பேட்டரி எடுத்துக்கொண்டு ஸ்ரீரங்கம் வரும்போது காவல் நிலையம் அருகே போலீசார் கேட்டுக்கொண்டதற்கினங்க மேற்படி இரண்டு கையொப்பங்களை செய்து கொடுத்தேன் . ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது . வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது , எதையும் கேட்டு தெரிந்துகொள்ளவில்லை. போலீசார் என்னை வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்யயவில்லை. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ-2 ஆகவும், கைப்பற்றுதல் மகஜர் ஆவணத்தில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ-3 ஆகவும், குறியிடுசெய்யப்படுகிறது.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை-**

போலீசார் விசாரணையில் கடந்த 20.06.2017 ம் தேதி பகல் 12 மணி அளவில் திருச்சி பிரன்ட்லைன் மருத்துவமனை அருகே நானும் எனது நண்பர் ரமேஷ் என்பவரும் வந்தபோது அந்த இடத்தில் ஸ்ரீரங்கம் போலீசார் சோதனை செய்தபோது ஆஜர் எதிரியை விசாரணை செய்துகொண்டு இருந்தனர் அ ப்போது ஆஜர் எதிரி தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்றால் சரியல்ல . அந்த ஒப்புதல் வாக்குமூலம் மேற்படி எங்கள்

முன்னிலையில் போலீசார் பதிவு செய்தனர் என்றால் சரியல்ல . அந்த ஒப்புதவ்ல வாக்குமூலத்தில் எதிரி தான் பெயர் மணி (எ) மணிமாறன் (எ) மணிபாரதி என்றும் மற்றொருவர் பெயர் கமலஹாசன் என்றும் தனது ஊர் மற்றும் மற்ற விவரங்களை தெரிவித்து மேற்படி இருவரும் சேர்ந்து 18.06.2017 ம் தேதி இரவு திருச்சியில் உள்ள கே .கே. சாலை சந்தை சென்றபோது அவர்களுக்கு முன்பாக ஒரு இருசக்கர வாகனத்தில் சென்ற பெண்ணிடம் உள்ள கேன்பேக்கை பறித்து அதில் இருந்து ரூ .500/- எடுத்துவிட்டு பேக்கை தூக்கி எறிந்துசென்றதாகவும் , பின்னர் அந்த பணத்தில் ரூ .200/-செலவு செய்தது போக ரூ.300/-வைத்திருந்ததாதகவும் ஒப்புல் வாக்குமூலம் அளித்தனர் என்றாலும் சரியல்ல . மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் அடிப்படையில் தன்னை அழைத்து சென்றால் சம்பவ இடம் மற்றும் பணம் சம்பந்தமாக தகவல் பேரில் அன்றைய தினமே 13 மணிக்கு பிரண்ட்லைன் மருத்துவமனை அருகே சென்று மேற்படி சாட்சிகளான எங்கள் முன்னிலையில் பணம் ரூ -300/- ( 100x3) மற்றும் சம்பவத்தில் பயன்படுத்திய இருசக்கர வாகனமான TN-59 BS-0558 என்ற வெள்ளை நிற ராயல் என்பீல்டு வாகனத்தையும் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினார்கள் என்றால் சரியல்ல . மேற்படி இரண்டு ஆவணங்களிலும் என்னுடன் ரமேஷ் என்பவரும் கையொப்பம் செய்து கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல . மேற்படி போலீசார் விசாரணையில்நடந்த உண்மையை சொல்லிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்றுவதற்காக உண்மையை மறைத்து எதிரிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-xxxx

Taken down by me in open court , read over to his and accepted by him as correct and made his signature

Sd/-xxxx

District Munsif – Cum - Judicial Magistrate,
Srirangam.

AdvocateA

**In the Court of District Munsif cum Judicial Magistrate , Srirangam**
**CC.No.41/2019**
**PW-1**

**Date :-02.01.2025**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.துரைராஜ் | Caste | |
| த/பெ. | திரு.முத்திரியன் | Calling | Army Rtd |
| Village | கோப்பு | Religion | |
| Taluk | ஸ்ரீரங்கம் | Age | 65 /2024 |

**அரசு தரப்பில் முதல் விசாரணை-**

நான் தற்போது ஸ்ரீரங்கம் கோப்பில் வசித்து வருகிறேன் . என்னிடம் காண்பிக்கப்படும் பார்வைமகஜரில் ஆவணத்தில் உள்ள 1 வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 20.06.2011 ம் தேதி காலை 10.30 மணி அளவில் ஸ்ரீரங்கம் கோவில் முன்பு போலீசார் பேப்பரில் கையெழுத்து வாங்கினர். நான் மட்டும் கையொப்பம் செய்தேன் . போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை . அந்த கையெழுத்து மட்டும் அ .சா.ஆ.1 ஆக குறியிடுசெய்யப்படுகிறது. போலீசார் கேட்டுக்கொண்டதற்கினங்க கையொப்பம் செய்தேன்.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை-**

போலீசார் விசாரணையில் கடந்த 20.06.2011 ம் தேதி காலை 10.30 மணி அளவில் கே .கே. சாலை ஜங்சன் அருகே நானும் , எனது நண்பர் மணிகண்டன் என்பவரும் பேசி கொண்டிருந்தபோது ஸ்ரீரங்கம் போலீசார் வந்து ஒரு பெண்ணிடம் பணம் பறித்தது சம்பந்தமாக விசாரணை செய்து சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் எங்கள் முன்னைிலையில் தயார் செய்தாலும் நானும் எனது நண்பர் மணிகண்டன் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்றாலும் சரியல்ல . மேற்படி போலீசார் விசாரணையில் நடந்த உண்மையை சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல..

Sd/-xxxx

Taken down by me in open court , read over to his and accepted by him as correct and made his signature

Sd/-xxxx

District Munsif – Cum - Judicial Magistrate,
Srirangam.